**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW1 – OS. No. 219/2023**

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி திரு.எஸ்.இராமச்சந்திரன், பி.எல் முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.சின்னசாமி | தொழில் : |
| த/பெ. : திரு, நஞ்சப்பன் | வயது : |
| முகவரி : | |

**வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 31.5.1994 | பாகப்பிரிவினை ஆவணம் | அசல் | **வா.சா.ஆ.17** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

1. என்னுடைய தாத்தா பெயர் இருளப்பன். என் தாத்தா இருளப்பன் எனக்கும் என்னுடைய சகோதரர் முத்துசாமிக்கும் 27.2.1967 தேதியில் ஒரு உயில் சாசனம் எழுதிவைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எஸ்எப் எண் 22 பொங்குபாளையம் கிராமத்தில் உள்ள 5 ஏக்கர் பூமி பாகத்தில் எனக்கும் என்னுடைய சகோதரர் முத்துசாமிக்கும் இருவருக்கும் பாதி பாதியாக எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனத்தில் மூன்று சொத்துக்கள் குறித்து எழுதப்பட்டுள்ளது. மேற்படி சொத்தில் இரண்டாவது சொத்து இந்த தாவா சொத்து என்றால் சரியல்ல அது வேறு சொத்து. மேற்படி உயில் பதிவு செய்யப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் 27.2.1967 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் ஐயம்பாளையத்தில்

நஞ்சப்ப மூப்பன் வீட்டிற்கு தெற்கு தென்வடல் தடத்திற்கு மேற்கு மேற்கே போகும் தடத்திற்கு வடக்கு கொண்டத்து கவுண்டர் காலியிடத்திற்கும் கிழக்கு இதன் மத்தியில் கிழக்கு வாசல் வில்லை வீடு அங்கனம் ஐந்து மேற்கு பார்த்த ஆஜாரம் அங்கனம் ஐந்து வீட்டை சேர்ந்த கதவு நிலவு கட்டுக்கோப்பு முன் பின் வாசல் சகிதம் வீட்டிற்கு தெற்கு பார்த்த நடையும் சகிதம் பின்னும் நஞ்சப்பன் வீட்டிற்கு வடக்கு கோவிலுக்கு மேற்கு நஞ்சப்பன் முன் காலியிடத்திற்கு கிழக்கு இதன் மத்தியில் உள்ள பிறவடை பங்கு பாத்தியமும்மேற்படி வீடு 1/46 இலக்கமிட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சாஆ 3 ஆவணத்தில் ரசீது எண் 123058 க்கு நஞ்சப்பன் மூப்பன் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் கதவு எண் 1/46 என்று உள்ளது. மேற்படி ஆவணத்துடன் இணைத்துள்ள அனைத்து ரசீதுகளும் கதவு எண் 1/46 என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்டுள்ள 2ம் இலக்க சொத்தும் வா.சா.ஆ 3 வரி ரசீதுகளில் கண்டுள்ள கதவு எண் 1/46 ஒரே வீடு என்றால் சரிதான் ஆனால் என் தாத்தாவிற்கு அந்த வீடு இருந்ததற்காக ஆதாரம் எதுவும் இல்லை. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தை நான் ஏற்றுக்கொண்டுள்ளேனா என்றால் ஆமாம்.மேற்படி உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்கள் அவருக்கு சுயாஜீத வகையில் பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் அது நத்தம் புரம்போக்கு பட்டா. நான் சொல்லவது தவறு என்றும் மேற்படி உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் சுயாஜீத வகையில் பாத்தியப்பட்டது தற்போது மோசடியான ஆவணங்களை உருவாக்கி அதை நான் மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. பொங்குபாளையத்தில் உள்ள சொத்துக்களை நானும் என்னுடைய சகோதரர்களும் பாகம் பிரித்துக்கொண்டோம் அந்த பாக பிரிவினை பத்திரத்தில் வீட்டின் கதவு எண் 1/46 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம் ஆனால் புது எண் மாற்றப்பட்டுள்ளது.

3. கதவு எண் 1/46 ஆனது என்னுடைய தாத்தா எனக்கு எழுதிவைத்த உயில் சாசனத்தை நான் ஒத்துக்கொண்டபோது அதில் உள்ள சங்கதிகளையும் ஏற்றுக்கொண்டதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. தற்போது நான் குடியிருக்கும் கதவு எண் 1/61. என் வீடு வடபுறம் என்றால் சரியல்ல ஒரே வீடு. நான் சொல்லவது தவறு என்றும் இரண்டு கதவு எண்கள் உள்ளது என்றும் வடபுறம் உள்ள வீட்டின் கதவு எண் 1/61 என்றும் தென்புறம் இருக்கும் வீட்டிற்கு 1/61 எ என்றால் அது மோசடியாக பெறப்பட்டது. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் 1/46 வீட்டிற்கு இரண்டு வாசல்கள் உள்ளது என்று எழுதியுள்ளார் என்றால் தெற்கு வாசல் என்பது பிரதான நுழைவாயில் மற்றொன்று கிழக்கு வாசல். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கதவு எண்ணானது பழைய வீட்டின் கதவு என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **பி.வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகைப்படத்தில் கதவு எண் 1/46 என்றும், 1/61 என்று எழுதப்பட்டுள்ளது என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் இரண்டாவது தாளில் உள்ள புகைப்படத்தில் இருப்பவர்கள் என்னுடைய பெற்றோர்கள் என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **பி.வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மற்றொரு புகைப்படத்தில் இருப்பது என் அண்ணனின் மருமகள் அவர் மேற்கு பார்த்த அசாரத்தில் அமர்ந்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **பி.வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வீட்டின் ஆசாரத்தில் கிழமேலாக சுவர் எழுப்பி அடைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள ஒரு புகைப்படத்தில் இருப்பது என் அண்ணனின் மனைவி. மேற்படி புகைப்படம் சுவர் எழுப்பும் போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பெண்மனியின் புகைப்படம் மற்றும் **பி.வா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.ஏனென்றால் சாட்சி கட்டுமானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் ஏற்கனவே ஒத்துக்கொண்ட கிழமேலாக ஆசாரத்தில் கட்டப்பட்டுள்ள சுவர் எழுப்பும் சமயத்தில் தான் மேற்படி என் அண்ணனின் மனைவி இருக்கும் புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல

அப்போது சுவர் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் மின் இணைப்பு எண் 49 என்று உள்ளது பழைய வீட்டின் மின் இணைப்பு புகைப்படம் என்றால் சரிதான் மேற்படி புகைப்படம் **பி.வா.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.அந்த புகைப்படம் பாகப்பிரிவினைக்கு முன்பாக எடுக்கப்பட்டது என்றால் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை.

5. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தாவா சொத்தின் தெற்கு வாசல் என்றால் சரிதான் அது **பி.வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தாவா சொத்தின் கிழக்கு வாசல் என்றால் இல்லை. மேற்படி புகைப்படத்தில் கதவு எண் 1/61 என்று உள்ளது என்றால் அந்த வீட்டிற்கு கதவு எண் இல்லை அந்தவீட்டின் கதவும் அது இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.09.27 18:05:18 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.